**செய்தி வெளியீடு எண்: 683** **நாள்:09.10.2019**

**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை இயக்குநரகம்,**
**சென்னை – 600 106**
**யோகா மற்றும் இயற்கை மருத்துவம்**

**2019–2020** ஆம் கல்வியாண்டிற்குரிய பி.என்.ஒய்.எஸ் மருத்துவ பட்டபடிப்பிற்கான மாணவர் சேர்க்கைக்கான முதற்கட்ட கலந்தாய்வு சென்னை, அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்திலுள்ள தேர்வுக்குழு அலுவலகத்தில் **28.08.2019** மற்றும் **29.08.2019** ஆகிய நாட்களில் நடைபெற்று அரசு மற்றும் சுய நிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரிகளில் உள்ள காலியிடங்களுக்கு (அரசு மற்றும் அரசு ஒதுக்கீட்டிற்கு ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளுக்கு ) இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**2)** அரசு மற்றும் சுய நிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரிகளில் இப்போது ஏற்பட்ட காலி இடங்களுக்கு நகர்த்துதல் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளோருக்கான கலந்தாய்வு நடைபெற உள்ளது.

**3)** மேற்கண்ட காலியிடங்களுக்கு, முந்தைய கலந்தாய்வில் கலந்து கொண்டு இட ஒதுக்கீட்டு ஆணையை பெற்று உரிய கல்லூரியில் இணைந்தவர்களுக்கும் முதற்கட்ட கலந்தாய்வில் காத்திருப்போர் பட்டியலில் இருக்க விருப்பம் தெரிவித்தவர்களுக்கும் நகர்த்துதல் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளோருக்கான கலந்தாய்வு (Movement / Wait listed Counseling), **12.10.2019** அன்று காலை **8.30** மணி முதல் நடைபெற உள்ளது.

கீழ்க்கண்டவர்கள் நகர்த்துதல் / காத்திருப்போர் பட்டியலில் உள்ளோருக்கான கலந்தாய்வில் கலந்து கொள்ள **தகுதியற்றவர்கள்:**

( அ ) முதற்கட்ட கலந்தாய்வில் பங்கு கொள்ளாதவர்கள்.

( ஆ ) முந்தைய கலந்தாய்விற்கு வருகை புரிந்து வருகை பதிவேட்டில் ஒப்பமிட்டுவிட்டு
விருப்பப் படிவம் சமர்ப்பிக்காதவர்கள்

( இ ) முதற்கட்ட கலந்தாய்வில் கலந்து கொண்டு பல்வேறு காரணங்களுக்காக தனது சொந்த விருப்பத்தின் பேரில் இட ஒதுக்கீட்டு ஆணையை பெற்று **16.09.2019** தேதிக்குள் கல்லூரியில் இணையாதோர்.

**4)** நகர்த்துதல் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளோருக்கான கலந்தாய்வில் கலந்து கொள்ளும் அனைவரும், அன்றைய தின தரவரிசை பட்டியல் தயார் செய்ய ஏதுவாக கண்டிப்பாக காலை **8.00** மணிக்குள்ளாக வருகை புரிந்து வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. தாமதமாக வருகை புரிவோர் எக்காரணத்தை கொண்டும் கலந்தாய்வில் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கப்படமாட்டாது. மேலும் அன்றைய தினம் தயாரிக்கப்படும் தரவரிசைப் பட்டியலில் அவர்கள் பெயரும் இடம்பெறாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

5) முந்தைய கலந்தாய்வில் கலந்து கொண்டு காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள் 12.10.2019 அன்று நடைபெறும் கலந்தாய்வில் கலந்து கொண்டு இட ஒதுக்கீட்டு ஆணை பெறும் போது ரூ.5,000/– க்கான கேட்பு வரைவோலை, ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் “ இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை – 106” என்ற பெயரில் 10–10–2019–க்கு பிறகு எடுத்ததாக சென்னையில் மாற்றத்தக்கதாக செலுத்த வேண்டும்.

**நகர்த்துதல் / காத்திருப்போர் பட்டியலில் உள்ளோருக்கான கலந்தாய்வு கால அட்டவணை**

| நாள் | கிழமை | நகர்த்துதல் / காத்திருப்போர் பட்டியலில் உள்ளோருக்கான கலந்தாய்வு காலை 8.30 மணி முதல் |
|---|---|---|
| | | வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடும் நேரம் காலை 7.00 மணி முதல் 8.00 வரை |
| 12.10.2019 | சனி | நகர்த்துதல் / காத்திருப்போர் பட்டியலில் உள்ளோருக்கான கலந்தாய்விற்கு தகுதியானோர் |

இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**